# அ.வெண்ணிலாவின் "விலக்கப்பட்ட கனி" சிறுகதை எழுப்பும் விவாதங்கள்

**இரா.குமரகுருபரன் & முனைவர் சு. அரங்கநாதன்,**
**தமிழ், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,**
**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,**
**சைதாப்பேட்டை, சென்னை 600015.**
**மின்னஞ்சல்: vinci.illustrator@gmail.com**

122

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்ணிய எழுத்தாளர் அ.வெண்ணிலா வாழ்க்கைக் குறிப்பு, விலக்கப்பட்ட கனி கதைக்கரு, இதற்கு ஆதாரமான விவிலியக்கதை, பெண்ணியம் வரையறை, மீட்டுருவாக்கம், மனு தர்மசாஸ்திரம் கூறும் மாதர் ஒழுக்கம், தேவதாசி ஒழிப்புச் சட்டம் - போராளிகள் , மேலைநாட்டு பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடுகள் தமிழ் இலக்கியங்கள் மீது ஏற்படுத்திய தாக்கம், சாபவிமோசனம்/ இரண்டாவது ஞானம் சிறுகதைகளுடன் ஒப்பீடு, பெண்ணியக் கூறுகள் விலக்கப்பட்ட கனி கதையுடன் பொருத்தப்பாட்டு ஆய்வு, ஆய்வு முடிவுகள் இந்த ஆய்வுக் கட்டுரையில் இடம் பெறுகின்றன.

## 1. பெண்ணிய எழுத்தாளர் அ.வெண்ணிலா:

வந்தவாசியில் பிறந்த அ.வெண்ணிலா முதுகலை உளவியல் கணிதம் படித்தவர். கல்வியியலில் " தேவதாசிகளின் கலைத் திறனும் ஆளுமையும்" என்ற ஆய்வேட்டிற்காக முனைவர் பட்டம் பெற்றவர். இதுவரை ஆறு கவிதை நூல்களும் மூன்று சிறுகதைத் தொகுப்புகளும் கடிதத் தொகுப்பு ஒன்றும் கட்டுரைத் தொகுப்புகள் ஐந்தும் இரு புதினங்களும் வெளியிட்டுள்ளார்.

1.1. " மீதமிருக்கும் சொற்கள் " சிறுகதைத் தொகுப்பு, " கனவும் விடிவும் " கவிதைத் தொகுப்பு ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியர். வரலாற்றாசிரியர்
ப.சிவனடியின் இந்திய சரித்திரக் களஞ்சியம் நூலை மறுபதிப்பு செய்துள்ளார்.
ஆனந்தரங்கப்பிள்ளை தினப்படி சேதிகள் குறிப்புகள் 12 தொகுதிகள்,
" வந்தவாசிப் போர் -250 " வரலாற்றுத் தொகுப்பு நூல், " கம்பலை முதல்" வரலாற்று கட்டுரைத்தொகுப்பு நூல்களை டாக்டர் மு.ராஜேந்திரன் இஆப, அவர்களோடு இணைந்து வெளியிட்டுள்ளார்.
இவர் எழுதி வரும் பெரியார் அணை உருவான வரலாற்றுத்தொடரான
" நீரதிகாரம் " 'ஆனந்த விகடன் ' தமிழ் வார இதழில் ஓராண்டு நிறைவடைந்து, வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுத் தொடர்கிறது.

1.2. ' விலக்கப்பட்ட கனி ' என்ற இவரது சிறுகதை " இந்திரநீலம் " என்ற இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறும் எட்டாவது கதை. (அகநி வெளியீடு, வந்தவாசி, முதல் பதிப்பு - 2020)


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

**2. 'விலக்கப்பட்ட கனி' கதைக் கரு:**

காற்று, இரவு,பகல், மழை வெப்பம் இல்லாத அடர் வனத்தின் அசைவற்ற மரங்கள் தண்டும் வேரும் மனிதசாயலிலும் மேல்பாகம் தாவரக்கிளைகளாகவும் நூற்றுக்கணக்கான உடல்கள் மரித்து நூற்றாண்டுகள் கடந்த பின்னும் அழுகாமல் வனப்புடன் தாவரப் பசும் நரம்புகளுடன் விளங்கின. நிபந்தனையற்ற அன்பு மட்டுமே தேவைப்படும் அன்பின் பெருவனம் அது. அழியும் உடல்வழி அழியாப் புகழ் பெற்ற உடல்கள் செழித்து உயர்ந்த தருக்களாய் விளங்கி நிற்கும் யேசுவின் உடலில் இருந்து பரவிய அன்பின் கதகதப்பு வனமெங்கும் பரவி கட்டுக்குள் வைத்திருக்கும் அளவு சிலுவைப் பெருமரமாகி விரிந்து நின்றது. சிலுவை ஆணிகளில் ரத்தக் கறைச்சுவடுகள் ஏதுமின்றி யேசுவின் தலை நிமிர்ந்து நேராக இருக்க எறியப்பட்ட கற்கள் உண்டாக்கிய காயங்கள் உலராது ரத்தப் பிசுக்குடன் காட்சியளிக்க, ஆணிகள் குற்றவுணர்வில் மருகியபடி தமது குமுறல்களைக் கூற முற்பட்டன.

கடமைகளைச் செய்த ஆணிகள் மக்கள் கருவிகள் மீது நம்பிக்கை இழக்கக் கூடாது என்று யேசு கூறித் தேற்ற, இரக்கமற்றவர்கள் சிலுவையுடன் இன்னும் பலமான வன்முறை கையாள்வர் என்று கருதி ஆணிகளே மென்மையாகக் காயப்படுத்தி பெருகும் குருதி வழி நிபந்தனையற்ற அன்பு கொண்ட யேசுவை தக்கவைத்ததாகப் பெருமிதத்துடன் கூறின.

யேசுவிற்கு அடுத்துத் தழைத்து நிற்கும் தாசியின் பெருமரக் கிளைகளின் துளிர் இலைகள் உடலெங்கும் காயம் பட்ட தழும்புகளை இதமாக வருடின.

தன்னை இரட்சித்த யேசுவின் வழிகாட்டலால் உடலை விற்பதிலிருந்து விடுபட்டு ரோகிகள், திருடர்கள், கொலைகாரர்கள், அன்பற்ற பாவிகள், வஞ்சகர்கள், துரோகிகள், பாவிகள், பச்சிளம் குழந்தைக் கொலைகாரர்கள் எல்லோரேயும் அரவணைத்த யேசுவைப் பின் தொடர்கிறாள்.

யேசுவிடம் உரையாடுகிறாள். யேசுவின் தொடுதலால் சொஸ்தமாகிய அவர்கள் வேசியின் தொடுதலால் விஷ ஜந்துக்கள் ஆனது எப்படி என்று வியக்கிறாள். நல்வழியில் தான் செல்வதான நிலையிலும் அவர்கள் உடற்பசியோடு மொய்த்து தங்களைக் களவாடியதை உரைக்கிறாள்.

"நீ போ, இனி பாவஞ்செய்யாதிரு" என்று தனக்கு வாக்கு சொன்ன யேசுவிடம் தன் வாழ்க்கையை நினைத்து தண்டித்துக் கொள்வதாகக் கூறுவதைக் கேட்டுத் திடுக்கிடும் யேசு அவளைச் சுகிக்க வந்த தொழுநோயாளியின் உடற்பசியை மனங்கோணாது தீர்த்து அனுப்பியதால் அடர்வன நற்கதி கிடைத்ததாகக் கூறுகிறார். உடலை விற்றுப் பிழைப்பு நடத்துபவளைப் பாபி என்று யேசு குறிப்பிட "பலவீனமான பெண்கள் பாபிகளா? "என்று எதிர்க் கணை தொடுத்து, தங்களைப் போன்றோரின் 'ஆன்மாவைத் தண்டிக்காதீர்! ' என்று இறைஞ்சுகிறாள். அன்பை விட வஞ்சகமும், நம்பிக்கையை விடத் துரோகமும், உண்மையை விடப் பொய்யும், நேசத்தை விட வெறுப்பும் தேவைப்படும் உலகில் தாங்கள் பாபிகள் உருட்டும் பகடைகள் என்பதாக எடுத்துக் கூறிக் குமுறுகிறாள். ஆட்டுக்குட்டியும் கொலைகாரர்களும் ஒன்றாகக் கருதும் யேசுவைப்போல தானும் உடலை மூலதனமாக்கி அன்பு செலுத்தும்போது யேசுவின் ரத்தத்தைப் போன்றே தங்களது ரத்தத்தையும் எண்ணி யேசு புனிதரானால் தாங்களும் அவ்வாறு தானே! . எப்படிப் பாவியாக முடியும்? என்று விளிப்பதைக் கேட்டு விழிக்கிறார் யேசு! புதிய வெளிச்சம் பரவுகிறது.

**3. விவிலியம் சொன்ன கதை:**

3.1. அ.வெண்ணிலா எடுத்தாண்டிருக்கும் கருப்பொருள் கிறித்தவர்களின் புனித நூலான விவிலியத்தில் ( லூக்கா எழுதின சுவிசேஷம்: அதிகாரம் 7: 36-50 ) இடம் பெறுகிறது:

3.2. " பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை (யேசுவை) வேண்டிக் கொண்டான். அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்.

3.3. அப்போது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து ஒரு பரணியில் பரிமளத் தைலம் கொண்டு வந்து,

3.4. அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து , பரிமளதைலத்தைப் பூசினாள்.

3.5. அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்ட போது இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் நம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப் பட்டவளென்றும் அறிந்திருப்பார். இவர் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்."

3.6. "ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி, இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டில் பிரவேசித்தேன். நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை. இவளோ கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்.

3.7. நீ என்னை முத்தஞ்செய்யவில்லை. இவளோ நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்தாள்.

நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை. இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்.

ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப் படுகிறதோ அவன் கொஞ்சமாய் அன்பு கூறுவான் என்று சொல்லி… "

3.8. " அக்காலத்தில் விருந்தாளியின் பாதங்களைக் கழுவுவதும் முத்தமிடுவதும் தைலம் பூசுவதும் யூதர்களின் கலாச்சாரத்திலிருந்த காரியங்கள். ஆனால் இந்தப் பரிசேயன் இயேசுவை வீட்டில் ஏற்றுக் கொண்டும், ஒரு விருந்தினருக்குரிய இத்தகைய கடமைகளைச் செய்ய விரும்பவில்லை போலும்…! இயேசு கிறிஸ்து அதனைச் சுட்டிக்காட்டுகிறார். (வச. 44-46). அங்கு தேவ குமாரரின் பாதங்களைச் சேவிக்க ஒரு பாவியாகிய பெண்தான் துணிந்து வருகின்றாள். அவருக்காக கற்களே கூப்பிடும் என்பதும் விபசாரிகள் பரலோக ராஜ்யத்தில் இருப்பார்கள் என்பதும் வேதம் தெரியும் என நடிப்போர் பிந்தினோராவர் என்பதும் எவ்வளவு உண்மை…! " (லூக்கா 7: 36-50 விளக்கம்)

*சொல்லோவிய வேதாகமம், தமிழ் வேதாகமச் சங்கம், மார்த்தாண்டம், 2006 (ப.1938)*

மேற்கண்ட விவிலியத் தொன்மத்தை பெண்ணியப் பார்வையில் அ. வெண்ணிலா இக்கதையில் அணுகுகிறார்.

**4. பெண்ணியம் - வரையறை**

4.1. " இலக்கியத்தில் பெண்ணியம், உலகளாவிய இலக்கியப் போக்காக அமைகிறது. பெண்ணிய இலக்கியப் பிரதிகளைத் தேடுவதின் மூலம் தன் இயக்கத்தைத் துவங்கி, இன்று பண்பாட்டில் பெண்ணைத் தேடுவதாக வளர்ச்சி கண்டுள்ளது. ஆணாதிக்கச் சமூகத்தில் விளிம்பில் ஓரம் கட்டப்பட்ட பெண்ணை மீட்டெடுக்க அது முயல்கிறது. இந்த நிலையில் பெண்ணிய இலக்கிய அணுகுமுறை அரசியல் அணுகுமுறையாக அமைகிறது. பிற அணுகுமுறைகள் மீது தாக்கத்தை நிகழ்த்துகிறது. கலகக் குரல் அதன் அடையாளமாக அமைகிறது.

அது 20 ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் பெண்ணிய இலக்கியச் சிந்தனைகளாக வளர்ச்சி கண்டுள்ளது. உயிரியல், மொழியியல், உளப்பகுப்பாய்வியல், மார்க்சியத் தத்துவம், பின்நவீனத்துவம், இனக் குழுக் கல்வி, பண்பாட்டியல் எனப் பல்வேறு தளங்களில் தன் செயல்பாடுகளை விரித்துள்ளது… காலம் காலமாகப் பெண் உடல் இலக்கியத்தில் ஆணின் போகக் கருவியாகவே சித்திரிக்கப் படுகிறது…

4.2. ஆணாதிக்கச் சமூகத்தில் பண்பாடு ஆண்களுக்காக ஆண்களால் கட்டமைக்கப் படுகிறது.பெண்ணிய நோக்கில் பண்பாடு மாற்றியமைக்கப் படுவது பண்பாட்டுத் தளமாக அமைகிறது.

20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழ்ப் பெண் படைப்பாளிகள் ஆண் படைப்பாளிகளை நகல் செய்பவர்களாகவே இருந்துள்ளனர். இவர்கள் கையாளும் கதைமொழி ஆண்வாசகர்களுக்கு கதை சொல்லும் போக்கில் ஆண்களால் உருவாக்கப்பட்டது. "

- *இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், எம்.வேதசகாயகுமார், அடையாளம், புத்தாநத்தம், 2021. ( பக்.295-297)*

**5. மீட்டுருவாக்கம்**

5.1. " தமிழ்ச் சிறுகதைகளை உலக அளவிற்கு எடுத்துச் சென்ற பெருமைக்குரியவர் புதுமைப்பித்தன். சொல்லவந்ததைச் சுற்றி வளைக்காமல், ஆணித்தரமாக எடுத்துரைக்கும் அவர், சில இதிகாச புராணக் கதைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் நவீன சிந்தனைகளைப் புகுத்தி மீட்டுருவாக்கம் செய்துள்ளார்…சாப விமோசனத்தில் ராமாயண காலம் தொடங்கி இன்று வரை பெண்களுடைய முதன்மைப் பிரச்சினையாக இருந்துவரும் 'பாலியல் பலாத்காரம்' என்பதைக் கருவாக எடுத்துக் கொண்டுள்ளார். அநியாயமாக ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட ஒரு பெண்ணைக் கதையின் நாயகியாக எடுத்துக் கொண்டு அவளின் மனப் போராட்டத்தை கதையோட்டமாகப் படைத்துக் காட்டுவது புதுமைப்பித்தன் காலத்தில் மிகப்பெரும் புரட்சியாகும்.

இவ்வுலகில், தம் மனத் தூய்மையை அவன் ஒருவனாவது புரிந்து கொண்டுள்ளானே என்ற நம்பிக்கை அவளைச் சாப விமோசனத்திற்குப் பின்பும் வாழச் செய்கிறது."

5.2. " சீதையின் வாய் மூலம் அக்கினிப் பிரவேசத்தைப் பற்றி அறியும் அகலிகைக்கு மனம் கொதிக்கிறது. ' அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்? ' என்று வினவினாள்… "அவர் கேட்டார், நான் செய்தேன் " என்று பதிலுரைத்தவுடன் அவள் மனம் சுக்குநூறாகியது. " அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா?" என்று

பொங்கினாள். ...தன்னைப் புரிந்து கொள்ளாது சாபமிட்ட கோதமனும் சீதையைப் புரிந்து கொள்ளாது அக்கினிப் பிரவேசம் செய்வித்த இராமனும் அவளுக்கு அப்போது ஒன்றாகவே தெரிந்தார்கள். இந்திரன்களும் கோதமர்களும் இராமன்களும் நிறைந்த இவ்வுலகில் வாழ்வதில் அர்த்தம் இல்லை என்று அவளுக்குத் தோன்றியது. அகலிகை மீண்டும் கல்லானாள். மனச் சுமை மடிந்தது என்று கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன். "

- *"பெண் மையச் சிறுகதைகள்" சாகித்திய அகாதெமி, சென்னை, 2007, முன்னுரை, இரா.பிரேமா. பக் 19- 21*

5.3. அ. வெண்ணிலா எழுதிய 'விலக்கப்பட்ட கனி' சிறுகதையை புதுமைப்பித்தன் எழுதிய 'சாப விமோசனம்' சிறுகதையுடன் ஒப்பிடலாம்.

இரண்டிலும் அவதார புருஷர்கள் யேசுவும், இராமனும். அவர்கள் அன்பின் பேருருவாகத் தெரிந்தபோதிலும் யேசு பாபி என்று விளிக்கும்போது விசனம் கொள்ளாது இப்படி அழைப்பது சரிதானா? என்று வேசி கேட்பதாக வெண்ணிலா எழுதுகிறார். இராமனே சந்தேகம் கொள்வதா? என்று அகலிகை கல்லாகச் சமைகிறாள்.

கண்ணீரால் யேசுவின் பாதங்களைக் கழுவினாலும் முத்தஞ்செய்தாலும் "மீண்டும் பாவம் செய்யாதே!" என்று யேசுவால் விளிக்கப் படும்போது அடர் பெருவனத்து அன்புசால் வேசியும் நொறுங்கிப்போகிறாள்.

5.4. " யேசுவே, உடலையே மூலதனமாக்கி அன்பு செய்தவர்கள்தான் நாமிருவருமே. பாவப் பட்டவர்களுக்கு உங்களின் ரத்தமே ரொட்டி என்றால், எங்களின் ரத்தமும்தானே ஆண்டவரே. பரமண்டலத்தின் பிதாவே, நீங்கள் புனிதரானீர்கள், நாங்களோ பாபியானோம். நாங்கள் வேண்டுமானால் எங்களைச் சொல்லிக் கொள்கிறோம் பாபியென்று. எம் ஆண்டவரே, நீங்கள் எங்களைப் பாபியென்று சொல்லாதீர்." என்ற கேள்விக்கு யேசு திகைத்து நிற்பதாக கதையை நிறைவு செய்கிறார்.

5.5. கிறிஸ்து காலம் முதல் இன்று வரை பெண்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக ஆண்கள் இருந்து வருகிறார்கள் என்பதை,

> " கற்கள் என்னை நோக்கி ஓயாமல் வந்து கொண்டிருந்தன. என்னைச் சுற்றி வீசப்பட்ட ஓராயிரம் கற்கள் குவியலாய்க் கிடக்கிறது. கிறிஸ்துவின் காலத்தில் இருந்து இன்றைய மிலேனியக் கற்கள் வரை, அன்றிலிருந்து இன்று வரை, எவ்வித மாற்றமும் இல்லை, கற்களின் வடிவத்தில். இவள் விபச்சாரி, நடத்தை கெட்டவள், இவளைக் கொன்று விடுவதே தர்மம்" என்ற அடிகளின் மூலம் எழுத்தாளர் விஜயலட்சுமி சேகர் சுட்டிக் காட்டுகிறார்... ஆண்கள், பெண்கள் மீது ஆதாரமின்றி குற்றம் சாட்டிவிடுகிறார்கள். ஆனால், அது பொய்க்குற்றம் என நிரூபிக்க, பெண்கள் எந்த ஆதாரத்தைக் காட்ட இயலும். ஆணாதிக்க உலகில் பெண்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை என்ற இக் கருத்தையே, " ஆண்கள் உலகில் வாழும் பெண்கள், ஆண்களுக்கான நாட்டில் வாழும் பெண்கள், ஆண்களின் வீட்டில் வாழும் தமக்கென எதுவுமில்லாப் பெண்களின் கதைகள், வாழ்விழந்து போன பெண்களின் கதைகள், வீடிழந்து போன பெண்களின் கதைகள், யுகங்கள் தோறும் தேசங்கள் தோறும் இனங்கள் தோறும் மதங்கள் தோறும் அடக்கப் படுவோரின் கதைகள்,

அதிகாரத்தின் அநியாயக் கதைகள், அதனுள்ளான வாழ்வின் உண்மைகள்... அதிகாரத்தின் அநியாயங்களை ஒரே குரலில் சொல்லும் கதைகள் - அவைகள். "

*(பக். 738, 739) "பெண்ணியம்: அகலமும் ஆழமும், " பேராசிரியர் இரா. பிரேமா, காவ்யா வெளியீடு, சென்னை, 2015.*

5.6. வீடிழந்துபோன பெண்களின் உண்மைக் கதைக்கு எடுத்துக்காட்டு பெண்ணிய எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் வாழ்வே. எழுத்தாளர் திலகவதி ஐபிஎஸ், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் முன்னோடி 'சிகரம்' ச. செந்தில்நாதன் ஆகியோரின் அயராத முயற்சிகளினாலும் , முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் அரசு ஆதரவினாலும் ராஜம் கிருஷ்ணன் நூல்கள், அவர் பிரக்ஞையின்றி மருத்துவ மனையில் வாழ்ந்த காலத்திலேயே, நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது மருத்துவச் செலவுக்காக வழங்கப்பட்டது.

இரந்து உயிர் வாழ விரும்பாத தமிழ்க் களஎழுத்தாள நாயகிக்கு அளிக்கப்பட்ட கவுரவம் இது. அதுவரை இருந்த விதிமுறையான, உயிரோடிருக்கும் எழுத்தாளர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப் படுவதில்லை என்பதிலிருந்து விலகி, வேதநெறி ஒழுகும் சமூகத்தில் பிறந்து விளிம்பு நிலை சமூகத்திற்காக எழுதிய படைப்பாளிக்கு தமிழ்நாடு அரசு வழங்கிய தனிச்சிறப்பு இது!

**6. " இரண்டாவது ஞானம் " சிறுகதையோடு ஒப்பீடு**

எழுத்தாளர் ச.சுப்பாராவ் எழுதிய சிறுகதை "இரண்டாவது ஞானம்" என்பதுவும் இதைப் போன்ற பெண்ணியக் கதைதான். ( *இரண்டாவது ஞானம் சிறுகதைத் தொகுப்பு, பாரதி புத்தகாலயம் வெளியீடு, சென்னை)* பவுத்தத்துறவியாக மாறி பவுத்த விஹார மடாலயத்தில் தங்க அனுமதி மறுக்கப்பட்டு இறுதியாக புத்தரிடம் நியாயம் கேட்கும் பெண்ணின் கதை. புத்தரே அனுமதி வழங்கச் சற்றுத் தயங்குவதாகக் கதை செல்லும். பெண் துறவியின் கேள்வி வாயிலாக புத்தருக்கே தோன்றும் இரண்டாவது ஞானம் என்பதாக நிறைவுறும் புனைவுக்கதை.

**7. மதங்களும், பெண்களும்**

7.1. ஏறத்தாழ அனைத்து மதங்களுமே பெண்களுக்குரிய நியாயமான சமத்துவ இடத்தை வழங்குவதில்லை. அதோடு இயைந்த நீதிசாத்திரங்களும் பெண்களை இவ்வாறே கட்டமைக்கின்றன.

7.2. மனு தர்மசாஸ்திரமும், பெண்களும்:

*மனு தர்ம சாஸ்திரம் ஐந்தாவது அத்தியாயம்:*
*உணவு, சுத்தி, மாதர்*

மாதர்க்கு உரியவை:

- 147. எந்தப் பருவத்தினளாயினும், தனது இல்லத்திலே கூட எந்தப் பெண்ணும் தன்னிச்சைப்படி எச்செயலும் இயற்றலாகாது.

- 148. இளமையில் தகப்பன், பருவத்தில் கணவன், விதவையான பின் மக்கள் இவர்கள் காவலிலன்றிப் பெண்கள் தம்மிச்சையாக இயங்க லாகாது.
- 149. தகப்பன், கணவன், மக்கள் இவர்களைத் தவிர்த்துத் தனித்திருக்க விரும்புதல் கூடாது. அப்படித் தனித்திருப்பின், பிறந்தகம் புக்ககமாகிய இரு குலங்களுக்கும் நிந்தை யுண்டாக்குவாள்.
- *மனுதர்ம சாஸ்திரம், தமிழாக்கம்: திருலோக சீதாராம், அலைகள் வெளியீட்டகம், சென்னை- 24, 2006.*

திருலோகசீதாராம் தமிழறிஞர்; தமிழுடன் வடமொழிப் புலமையும் மிக்கவர்.

7.3. 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த' வேதமரபிலே வந்த பாரதி, புதுமைப்பெண்ணை அடையாளம் காட்டினான். காலத்தை மீறி நின்றதால்தான் அவனுக்கான இடம் பிரபஞ்ச மயமானது.

7.4. இருப்பினும்,

" காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்

காரியம் யாவினுங் கைகொடுத்து "

எனப் பெண்ணை ஆணுக்குத் துணை என்ற நிலையிலேயே வைத்துப் பாடியுள்ள பாரதியை பெண்ணை மையப் படுத்தியோ, ஒருவர்க்கொருவர் துணை என இருவரையும் மையப் படுத்தியோ பாடாது விட்டார்" எனப் பெண்ணிய நோக்கிலே காணுகிறார் ராஜம் கிருஷ்ணன்.

" *காலந்தோறும் பெண்மை " ( ப.89 ).*

**8. தேவதாசி ஒழிப்புச் சட்டம்**

*போராளி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்:*

8.1. தமது குடும்பத்துப் பெண்கள் கோவில்களுக்கு 'பொட்டுக்கட்டி விடப்பட்ட' விபச்சாரச் சீரழிவிலிருந்து மீட்டவர் மூவலூர்

இராமாமிர்தம் அம்மையார் (1883-1962). தமிழும் வடமொழியும் கற்ற இவர் மேடைப் பேச்சு வாயிலாக மூட நம்பிக்கைகளைச் சாடினார். குலத்தில் ஆண்வாரிசு உருவாகாத நிலையில் தமது குடும்பப்பெண்களையே கடவுளுக்கு மணமுடித்து தேவதாசிகளாக ஆக்கும் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தபோது பெரியார் ஈவெரா. தலைமையிலான சுயமரியாதை இயக்கம் - நீதிக்கட்சி சார்பில் பங்கேற்றுப் பரப்புரை நிகழ்த்தினார். 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. உடன் கலந்து கொண்டு இதற்கு ஆதரவு நல்கினார்.

8.2. "தாசிகளின் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர் " என்ற சமூகப் புதினத்தை 1936 ஆம் ஆண்டில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் எழுதி வெளியிட்டார். இவர் எழுதிய ஒரே சிறுகதை " தமயந்தி " (1945). இவரது

" இஸ்லாமும் திராவிடர் இயக்கமும் " என்ற கட்டுரை வாசகர்களின் கவனத்தைப் பெற்றது.

8.3. மூதறிஞர் இராஜாஜி, பெரியார், திரு.வி.க., டாக்டர் வரதராஜுலு, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம், சீர்காழி சுப்பையா ஆகியோர் ஆதரவளித்ததால், சில செல்வந்தர்களின் பெரும் எதிர்ப்பையும் மீறி, தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறியது.

8.4. பெண் கல்விப் போராளி மலாலா ஏற்படுத்திய தாக்கம்:
பாகிஸ்தானிய இளம்பெண் மலாலா யூசுஃப்ஸாய் பெண் கல்விக்காகப் பாடுபட்டதால் பாகிஸ்தானியத் தாலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலுக்கு ஆளாகி, பிரிட்டிஷ் மருத்துவ சிகிச்சை காரணமாக உயிர் பிழைத்தவர். 2014 ஆம் ஆண்டு, மிகவும் இளம் வயதில் (17) நோபல் பரிசு பெற்ற முதல் எழுத்தாளர் இவர்தான்! மனித உரிமைகள் மற்றும் தான் வசித்த பஷ்டூன் கிராமப்புறப் பெண் கல்விக்காக இவ்விருதை வென்றார். கிறிஸ்டினா லாம்ப் என்பவருடன் இணைந்து எழுதிய இவரது வாழ்க்கை வரலாற்றை காலச்சுவடு பதிப்பகத்திற்காக " நான் மலாலா " என்று சிறப்பாக மொழிபெயர்த்தவர் வங்கி ஊழியர் பத்மஜா நாராயணன்.

8.5. இவ்வாறு அனைத்து சமய அறநூல்களும் வாழ்வியல் அறத்தை உணர்த்தும்போது பெண்களுக்கான சம இடத்தை வழங்குவதில்லை; அல்லது மீறி வழங்கினாலும் ஆணின் துணையாகவே நினைக்கின்றன; ஆணின் இணையாகக் கருதுவதில்லை.

**9. தமிழிலக்கியம் மீது பெண்ணியவாத இலக்கியத் தாக்கம்**

9.1. மேரிவுல்ஸ்டன்கிராப்ட், சைமன் தி புவா, பெட்டி ஃப்ரைடன், கேத் மில்லட், ஜூலியட் மிஷேல், எலைன் ஷோவால்டர், பார்பரா ரிக்னி, எலிசபெத் ஏபெல், மேரி டோலி, மார்கரெட் அட்வுட், நீனா பெய்ன் ஆகியோரின் பெண்ணியத் திறனாய்வைக் கருத்தில் கொண்டு
*" பெண்ணியத் திறனாய்வு - சில அணுகுமுறைகள் "* என்னும் தமது ஆய்வுக் கட்டுரையில் ( " *தொல்காப்பியர் முதல் தெரிதா வரை ", பக்.393- 406 )*
பேராசிரியர் பொ.நா.கமலா பெண்ணியத்தின்
அடிப்படைக் கூறுகளை பெண்ணியவாதிகள் எப்படிக் கையாள்கின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

*9.2. பெண்ணியம் குறித்த*
*பெண்ணியவாதிகள் பார்வை*

1) பாலின வேறுபாட்டுப் பார்வையை இனங் காணுகின்றனர்.
2) பனுவலானது ஆணாதிக்கச் சொல்லாடலின் களமாக அன்னாரால் கருதப்பெறுகிறது.
3) தன்னிலை (subjectivity) ஆக்கக் களனாகப் பனுவல் உள்ளதென அன்னார் எண்ணுகின்றனர்.
4) பனுவலில் சொல்லாமல் விடப்பட்ட இடைவெளிகளை (gaps) ஒடுக்கப்பட்ட /அமுக்கப்பட்ட மௌனங்களை வெளிக் கொணர முயலுகின்றனர்.
5) புனைவுகளைக் கட்டவிழ்க்கின்றனர் (Demystify);
6) தொன்மங்களைக் கட்டவிழ்ப்புச் செய்கின்றனர் (Demythify) ;

7) ஆண் மையச் சொல்லாடலிலுள்ள இருமை எதிர்வுகளைக் கட்டவிழ்ப்பு (Deconstruction) செய்கின்றனர்.
8) குறியீட்டு முறையில் (Symbolic Order) அமைந்த மொழியைத் தகர்த்து குறிமுறையில் (Semiotic) அமைத்துக் காண்கின்றனர்.
9) குறிப்பான்களின் ஆட்டக்களமாகப் பனுவல் விளங்குவதாகக் கருதும் பின் அமைப்பியலாரை (Post-Structuralist) அடியொற்றி பனுவலில் உள்ள பன்முகப் பொருண்மைகளை தேடிக் காணுகின்றனர்.
10) இலக்கியங்களில் 'பெண்' பற்றிய தவறான கோட்பாடுகள் காலங்காலமாக மறுஉற்பத்தி (Reproduction) செய்யப் படுவதை இனங்கண்டு கண்டனம் செய்கின்றனர்.

9.3. இனி இக்கூறுகளின் பொருத்தப்பாடு

' விலக்கப்பட்ட கனி ' சிறுகதையில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை, ஒவ்வொன்றாக ஆய்வு செய்யலாம் :

1) " தாசி என்று என்னைக் கல்லெறிய வந்தவர்களில் எவருமே பாவமற்றவர்கள் இல்லையென்று அவர்களை விலகச் செய்தீர். ...ஆனால் ஆண்டவரே, நான் கிளம்புகிற வேளையில் " நீ போ, இனி பாவஞ்செய்யாதிரு" என்றெனக்கு வாக்குச் சொன்னீர். எம் ஆண்டவருக்கும் புரியாத அற்ப ஜீவிதமாகிய என் ஜீவிதத்தை நினைத்தே என்னை நான் தண்டித்துக் கொள்கிறேன் எம் ஆண்டவரே." (பக்.207 / 208) என்று தாசி தன்னிடம் கூறியபோது யேசு,

" பாவப் பட்டவர்களின் ஆன்மாவையே தன்னால் ரட்சிக்க முடியும். அந்த ஆன்மாவின் பாவங்களைக் கழுவமுடியும் என்றெண்ணிக் கொண்டிருக்கும் தன்னை நோக்கி இந்தத் தாசியின் கை குற்றஞ் சுமத்துகிறதோ ?" என்று திடுக்கிடுவதாக உணர்த்துவதன் வழி, கதாசிரியர் வெண்ணிலா பாலின வேறுபாட்டுப் பார்வையை இனங் காணுகின்றார்.

2) " என்னைப் பாபி என்று சொல்வதில் நியாயம் இருக்கிறது என்று எல்லாம் வல்ல எம் ஆண்டவர் நம்புகிறீரா?"

என்ற தாசியின் கேள்விக்கு,

"உடலை விற்றுப் பிழைப்பவளுக்குப் பாபி என்று பெயரல்லவா? " என்ற யேசுவின் கூற்றை மறுக்கும் தாசி,

" உடலை விற்க வேண்டுமென்பது என் நோக்கமில்லையே?" என்கிறாள். ஆணாதிக்கச் சொல்லாடல் களமாக 'பாபி' என்ற பதம் அலசப்படுகிறது.

தொழுநோயாளியைப் பாபி என்று யேசு சொல்லவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

3) " உங்களால் பாவப் பட்டவர்களே என்று அழைக்கப்பட்டு விட்டால் எங்களுக்கு இந்த இகபாரத்திலிருந்து ஏது விடுதலை?" என்று யேசுவிடம் வேசியின் கெஞ்சலில், ஆடவனின் ஆணாதிக்கச் சிந்தனை மரபாக அவனது தன்னிலையாக்கத்திற்கு ஆட்படுத்திக் கொள்பவளாக பெண் இருக்கும் போக்கை அப்போதைய சூழலாக வெளிப்படுத்துகிறார். நிலவுடைமை சமூகத்தின் சாட்சியாக இருந்த காலமாக இது இருக்கிறது.

4) "உடலை விற்றுப் பிழைப்பவளுக்குப் பாபி என்று பெயரல்லவா?" என்ற யேசுவை நோக்கி " பலவீனமான பெண்கள் பாபிகளா? உடலின்பம் என்பது இந்த உடம்புக்கு இருந்ததில்லை. கொடுமையை அனுபவிக்கும் வலியும் துயரமுமே மிஞ்சியிருக்கின்றன " என்ற வேசியின் அடுக்கடுக்கான கேள்வி பதில்கள், பனுவல்களில் சொல்லாமல் விடுபட்டுள்ள இடைவெளிகளைத் ( gaps) தொட்டுக் காட்டுகின்றன. .

5) விலைமகள் அன்றாடம் பெறும் எந்திர ரீதியான

' உடலின்பம் ' வலிமிக்கது.

மகளிர் போகநுகர்வுக்கானவள் என்ற புனைந்துரை இதனால் அடிபடுகிறது; உடலின்பம் ஆணுக்குத்தான் என்று புனைவு நீக்கம் (demystification) செய்கிறார் வெண்ணிலா.

6) வேசியின் இல்லம் நோக்கி வந்த தொழுநோயாளியின்

' உடற்பசியைத் தீர்த்து அவனுக்கு நிம்மதி தந்து அனுப்பியதால் ' வேசியும் பெருவனத்தை ( = சொர்க்கம்) அடைந்ததான கதையை அவளுக்கு நினைவுபடுத்திய யேசுவின் தொன்மத்தை வேசியின் சொற்கள் வழித் தகர்த்தெறிகிறார்

( demythification ). ' இந்த உலகத்திற்கு அன்பை விட வஞ்சகமும், நம்பிக்கையை விடத் துரோகமும், உண்மையை விடப் பொய்யும், நேசத்தை விட வெறுப்பும் மேலாகத் தோன்றுவது எங்ஙனம்?' என்று கேட்பது சிந்திக்க வைக்கிறது. காலந்தோறும் எழும் பெண்ணியத்தின் ஆழமான கேள்வி இது.

7) " உடலையே மூலதனமாக்கி அன்பு செய்தவர்கள்தான் நாமிருவருமே. பாவப் பட்டவர்களுக்கு உங்களின் ரத்தமே ரொட்டி என்றால் எங்களின் ரத்தமும்தானே ஆண்டவரே, பரமண்டலத்தின் பிதாவே, நீங்கள் புனிதரானீர்கள், நாங்களோ பாபியானோம் " என்று ஆண்மையச் சொல்லாடல்கள் உற்பத்தி செய்த இருமை எதிர்வுகளைக் கட்டவிழ்ப்பு செய்கிறார். பெண்ணியவாதி ஜூலியா கிறிஸ்தவா எழுத்தின் தாக்கம் இது.

8) " எங்களின் கூர்மையை நாங்கள் இன்னும் கூர்மைப் படுத்திக் கொண்டோம் யேசுவே, எங்கள் வேலையை நாங்கள் செய்யாமல் போனால், எங்களைவிட மோசமான ஆயுதங்களால் நீங்கள் தாக்கப் படுவீர்கள் என்பதால், நாங்கள் உங்களைக் காயப் படுத்தினோம் " என்று 'ஆணிகள்' என்ற பெண்ணியக் குறிமொழியால் ஆணைக் காத்து நிற்கும் வலிமையைப் பதிவு செய்கிறார்.

" தங்களின் மேல் நம்பிக்கை இழந்த மக்கள் கருவிகளைத்தானே நம்பியாக வேண்டும் " ( சமூக உற்பத்திக் கருவிகள் / ஆணிகள் = பெண்) என்ற பெண்ணிய மொழியானது, ஆணி குத்திக் கிழிக்கும் தன்மை கொண்டது என்னும் ஆணாதிக்க குறியீட்டு மொழியை, காத்து ரட்சிப்பதான பொருளில் மாற்றிக் காட்டுகிறது.

9) "அன்பின் பெருங்கடலுக்குள் செம்மண் நிறப் புதுவெள்ளம் சங்கமமாவதைப் பார்த்து யேசு திகைத்தார் " என்று நிறைவுறும் பனுவலின் நுண்மையான கட்டமைப்பு பல உண்மைகளை உணர்த்தி நிற்கிறது. ' தன் ஞானத்தின் பேரொளியில் இந்தப் பெண் மெல்லிய இருளாகப்

படர்வதாக உணர்ந்த ' யேசுவின் தவறான எண்ணம் மனமாற்றம் பெறுமாறு நிறைமொழி அமைகிறது.

10) ஒதுக்கப்பட்ட தாசி / பெண் தமது சிக்கல்களுக்கான மீட்சியை விவாதங்கள் வழி அடைய வாயில் ஏற்படுத்தித் தருகிறது இக்கதை.

சமையற்கட்டில் ' குலமகளும் ' பள்ளியறையில் ' விலைமகளும் ' உழல்வது ஆணாதிக்கச் சிந்தனை விளைவுதான் என்பதை

வலுவான பெண்ணிய மொழியில் பேசும் சிறுகதை இது.

**10. ஆய்வு முடிவுகள்**:

- பாலின வேறுபாட்டுப் பார்வையை இனங் காண்கிறது.
- ஆணாதிக்கச் சொல்லாடல்களைக் கொண்டே ஆணுக்கு உணர்த்துவதாக அமைகிறது.
- தன்னிலையின் உருவாக்கத்தை உணர்த்துகிறது.

இதுவரை சொல்லாமல் விடப்பட்ட இடைவெளிகளை வெளிப்படுத்துகிறது ; அமுக்கப்பட்ட பெண்ணின் மௌனங்களைப் பேசுகின்றது.

- புனைவுகளைக் கட்டவிழ்க்கிறது.
- தொன்மங்களைக் கட்டவிழ்ப்புச் செய்கிறது.
- ஆண் மைய இருமை எதிர்வுகளைக் கட்டவிழ்ப்பு செய்கிறது.
- ஆணாதிக்கக் குறியீட்டு மொழியைக் குறிமொழியாக்குகிறது.
- குறிப்பான்களின் ஆட்டக்களமாய் பனுவல் விளங்குவதாக கருதும் பின் அமைப்பியலார் வழியாக பன்முகப் பொருண்மைகளைத் தேடி அடைகிறது.
- பெண் குறித்த தவறான புரிதல் கோட்பாடுகள் மறுஉற்பத்தி செய்வதைக் கண்டனம் செய்து, புது வெளிச்சம் பாய்ச்சுகிறது.

**துணை நின்ற நூல்கள்**


1. *கமலா, பொ.நா., தொல்காப்பியர் முதல் தெரிதா வரை , காவ்யா, சென்னை, 2017.*
2. *சுப்பாராவ், ச. , இரண்டாவது ஞானம், பாரதி புத்தகாலயம், சென்னை, 2012.*
3. *பிரேமா, இரா., 'முன்னுரை', பெண் மையச் சிறுகதைகள், சாகித்திய அகாதெமி, சென்னை, 2007.*
4. *பிரேமா, இரா., பெண்ணியம் : அகலமும் ஆழமும் " , காவ்யா வெளியீடு, சென்னை, 2015.*
5. *வெண்ணிலா, அ., இந்திரநீலம், அகநி வெளியீடு, வந்தவாசி, 2020.*
6. *வேதசகாயகுமார், எம். , இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், அடையாளம், புத்தாநத்தம், 2021.*
7. *மலாலா யூசுஃப்ஸாய் / கிறிஸ்டினா லாம்ப், நான் மலாலா, தமிழில்: பத்மஜா நாராயணன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2017.*
8. *ராஜம் கிருஷ்ணன். காலந்தோறும் பெண், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2019.*
9. *சொல்லோவிய வேதாகமம், தமிழ் வேதாகமச் சங்கம், மார்த்தாண்டம், 2006.*